ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1681/29 - 2010 නොවැම්බර් 23 වැනි අඟහරුවාදා - 2010.11.23

*1681/29 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 23 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### அரச முகாமை உதவியாளர் சேவை பிரமாணக் குறிப்பு - திருத்த இல. 03

2004 திசெம்பர் மாதம் 24 ஆம் திகதிய 1372/23 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அரச முகாமை உதவியாளர் சேவை பிரமாணக் குறிப்பினை பின்வருமாறு திருத்துவதற்கு அமைச்சரவை விதித்துள்ளது.

14.3.4 உட்பிரிவின் இறுதியில் பின்வரும் புதிய உட்பிரிவுகள் உள்ளடக்கப்படுகின்றன.

(அ) 2004.12.24 ஆந் திகதிக்கு முன் அரச முகாமை உதவியாளர் சேவையில் சேர்ந்தவர்களும் 2012.07.01 ஆந் திகதிக்கு முன் ஓய்வு பெறவுள்ளவர்களும் சேவைப் பிரமாணத்தில் விதிக்கப்பட்டுள்ள இரண்டாம் மொழித் தேவையை பூர்த்தி செய்வதிலிருந்து விலக்களிக்கப்படுவர்.

(ஆ) ஏனையவர்கள் 2012.07.01 ஆம் திகதிக்கு முன் அரச முகாமை உதவியாளர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டாம் மொழித் தேவையை பூர்த்தி செய்ய வேண்டும்.

(இ) 2012.06.30 ஆம் திகதி வரை அரச முகாமை உதவியாளர் சேவையின் அலுவலர்கள் யாவர்க்கும் இரண்டாம் மொழித் தேவையை பூர்த்தி செய்யாத நிலையில் தமது சம்பள ஏற்றங்களை உழைத்துப் பெறுவதற்கும் விதித்துரைக்கப்பட்ட உயர்வுகளை பெறுவதற்கும் உரித்துக்களை வழங்க வேண்டும்.

பீ. பி. பி. எஸ். அபேகுணரத்ன,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்.

அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
கொழும்பு 07,
2010, நவெம்பர் 18.

12- 252